IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

C.C. 59/2024 Date : 07.11.2025 P.W. 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அலமேலு | ஆதார் எண் | |
| தந்தை பெயர்; | சக்திவேல் | தொழில் | பேன்ஸி ஸ்டோர் வைத்துள்ளேன். |
| கிராமம் | உளுந்தூர்பேட்டை | வயது | 45 |
| எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை..**

1. என்னுடைய கணவர் என்ன தொழில் செய்கிறார் என்றால் பேன்ஸி ஸ்டோர் வைத்திருந்தார், அதன் பிறகு நான் அக்கடையில் வியாபாரம் செய்து வருகிறேன். எனது பிள்ளைகளும் அந்த கடையில் வியாபாரம் செய்வார்கள் என்றால் அவ்வபோது வருவார்கள். பேன்ஸி ஸ்டோரில் ஒரு நாளைக்கு தோராயமாக எவ்வளவு வருமானம் வரும் என்றால் தினமும் 4, 5 ஆயிரம் வருமானம் வரும்.

2. பேன்ஸி ஸ்டோரில் முதலீடு போக லாபம் ஒரு நாளைக்கு ரூ.500, 700 கிடைக்கும் என்றால் சரிதான். என்னுடைய பிள்ளைகளில் ஒருவர் என்னுடன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். பிள்ளைகள் மூவரையும் பேன்ஸி ஸ்டோர் கடை வருமானத்தினை வைத்து தான் படிக்க வைத்தோம் என்றால் சரிதான். எனது கணவர் இறந்த பிறகு எனது இளைய மகனை பொறியியல் படிக்க வைத்ததற்கு வருடத்திற்கு எவ்வளவு செலவு ஆகும் என்றால் 1 லட்சம் ஆகும்.

3. குடும்பத்திற்கு செலவு தோராயமாக மாதம் எவ்வளவு ஆகும் என்றால் ரூ.5000 ஆகும். நான் எதிரிக்கும் கொடுத்ததாக சொல்லும் தொகை ரூ.10 லட்சத்தை மொத்தமாக ஒரே நேரத்தில் எனது கடையில் வைத்து, காலை 8 – 9 மணியளவில் கொடுத்தேன் என்றால் சரிதான். ரூ.2 லட்சத்திற்கு மேல் பணம் பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்றால் காசோலை அல்லது வங்கியின் மூலமாக தான் கொடுக்க முடியும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, மனுவிலோ என்ன அவசர தேவைக்காக எதிரி பணம் வாங்கினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால்

சரிதான். எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, மனுவிலோ எனது கடையில் வைத்து எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எனது வங்கியின் சேமிப்பு கணக்கில் இருந்து தொகை எதுவும் எடுத்து கொடுக்கவில்லை என்றால் இல்லை.

5. நான் ரூ.10 லட்சம் எதிரிக்கு கொடுப்பதற்கு ஆதரவாக கை ரசீதோ, புரோநோட்டோ எழுதி வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான், ஒரு வாரத்தில் நிலத்தை விற்று பணத்தை தருவதாக சொன்னதால் எந்த ஆவணத்தையும் எழுதி வாங்கவில்லை. மேற்படி விவரத்தை எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, மனுவிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

6. எனது கணவரும் எதிரியும் நண்பர்கள் என்றால் சரிதான். என் கணவருக்கும் எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இருந்தது. அந்த பணப்பரிவர்த்தனை என் கணவர் இறந்ததோடு முடிந்துவிட்டது என்றால் ஆமாம். எதிரிக்கும் என் கணவருக்கும் இடையேயான கொடுக்கல் வாங்கலில் ஆவணங்கள் ஏதும் எழுதி பெறப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது வங்கி கொடுக்கல் வாங்கல் வரவு செலவு கணக்குகளை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. இவ்வழக்கு காசோலை தொகையை நான் எதிரிக்கு கொடுத்த போது வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் தமிழ்நாடு சிறப்பு காவல் படையில் ஓட்டுநராக உள்ளார். நான் காசோலை தொகை மற்றும் காசோலை கொடுத்ததாக நான் குறிப்பிட்ட இரண்டு தேதிகளிலும் எதிரியானவர் காவல் துறையில் 24 மணி நேரப்பணியில் இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பணியின் போது வண்டியை நிறுத்திவிட்டு எனது கடைக்கு அவ்வபோது வருவார்.

8. காவல் சிறப்பு பணியில் இருப்பவர்கள் ரோந்து வரமாட்டார்கள் என்றாலும், முகாமில் தான் பணியில் இருப்பார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் மாத வருமானம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. எதிரிக்கு எவ்வளவு நிலம் உள்ளது, எங்கு எங்கு உள்ளது என்று கேட்டேனா என்றால் இல்லை.

9. எதிரிக்கும் எனது கணவருக்கும் பண பரிவர்த்தனை இருந்தது என்றாலும், அப்போது எதிரியிடம் இருந்து என் கணவர் இவ்வழக்கு காசோலை, மற்றொரு காசோலையான 207358 மற்றும் பூர்த்தி செய்யப்படாத புரோநோட் ஆகியவற்றை

பெற்று வைத்திருந்தார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனது கணவருக்குமான பண பரிவர்த்தனை பைசல் ஆகிவிட்டது என்றாலும், பின்னிட்டு எனது காசோலை மற்றும் புரோட்டை எதிரி எனது கணவரிடம் கேட்டபோது தேடி தருவதாக சொல்லிவிட்டு தரவில்லை என்றால் சரியல்ல.

10. எதிரி என் கணவரிடம் கொடுத்த வழக்கு காசோலையை அவர் இறந்த பிறகு எதிரியிடம் இருந்து பணம் பறிப்பதற்காக நான் ஒரு பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

(S/d.V.Gomathi)
Judicial Magistrate-I,
Ulundurpet.

Typed by E.Veeramani